# Visit of Vice President and Minister of Foreign Affairs of Colombia to India (October 1-3, 2021)

October 03, 2021

## கொலம்பியாவின் துணை ஜனாதிபதி மற்றும் வெளியுறவு அமைச்சரின் இந்தியா வருகை (அக்டோபர் 1-3,2021)

அக்டோபர் 03, 2021

கொலம்பியாவின் துணை ஜனாதிபதி மற்றும் வெளியுறவு அமைச்சர் திருமதி. மர்டா லூசியா ரமிரெஸ் இந்தியாவிற்கு 1-3, அக்டோபர் 2021 தேதிகளில் விஜயம் செய்தார். சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சர் டாக்டர்.லூயிஸ் பெர்னாண்டோ ரூயிஸ், அரசாங்க அதிகாரிகள்,தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் கல்வி நிலையங்களின் பிரதிநிதிகளும் உடன் வந்தனர்.

2. 1 அக்டோபர் 2021 அன்று, இந்தியாவின் துணை ஜனாதிபதி ஸ்ரீ வெங்கையா நாயுடு திருமதி ரமிரெஸைச் சந்தித்து பல பகுதிகளில் இரு தரப்பு ஒத்துழைப்பு குறித்து கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டார். இந்தியாவின் துணை ஜனாதிபதிக்கு கொலம்பியாவிற்கு விஜயம் செய்ய விபி ரமிரெஸ் அழைப்பு விடுத்தார். 2 அக்டோபர் 2021 அன்று, வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் திருமதி ரமிரெஸுடன் ஒரு விரிவான இருதரப்பு உரையாடலை நடந்தினார். வெளிவிகார இராஜாங்க அமைச்சர் திருமதி.மீனாக்ஷி லேகி அவர்கள் கடந்த மாதம் ஆரோக்கியமான சந்திப்பை நிகழ்த்தியதுடன் 2021 அக்டோபர் 3 ஆம் தேதி திருமதி ரமிரெஸைச் சந்தித்தார்.

3. திருமதி.ரமிரெஸ் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் இந்திய மருத்தவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐசிஎம்ஆர்) அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். பின்னர், பயோடெக்னாலஜி மற்றும் மருத்துவ ஆராய்ச்சி துறைகளில் ஒத்துழைப்புக்கான இரண்டு கடிதங்கள் பயோடெக்னாலஜி துறை மற்றும் ஐசிஎம்ஆர் அவர்களின் கொலம்பிய சகாக்களுடன் கையெழுத்திட்டன.

4. திருமதி .ரமிரெஸ் வருகைக்கு முன்னர், டாக்டர்.லூயிஸ் பெர்னாண்டோ ரூயிஸ் தலைமையிலான 48 உறுப்பினர் குழு, சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சர் புனே,ஹைதராபாத் மற்றும் பெங்களூருவுக்கு செப்டம்பர் 27-30 வரை பயணம் செய்து, இந்திய மருந்து நிறுவனங்கள் மற்றும் சிறப்பு மையங்களுக்கு சென்றது: அவர்கள் இஸ்ரோ வசதிகளையும் பார்வையிட்டனர் மற்றும் நியூ ஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (NSIL) மனித விண்வெளி விமான மையம் (HSFC) ஆகியவற்றின் பிரதிநிதிகளை சந்தித்தனர்.

5. கொலம்பியா லத்தீன் அமெரிக்காவில் இந்தியாவின் ஒரு முக்கிய பங்காளியாகும், மேலும் இருதரப்பு உறவுகள் விரிவடைந்து வருகின்றன,குறிப்பாக தொற்றுநோய் இடையூறுகள் இருந்தபோதிலும் பொருளாதார மற்றும் வணிகத்துறையில்.திருமதி. ரமிரெஸின் இந்தியா வருகைக்கு முன்னதாக வெளியுறவுத் துறை இராஜாங்க அமைச்சர் திருமதி மீனாக்ஷி லேகி செப்டம்பர் 4-6 ,2021 வரை கொலம்பியாவிற்கு வருகை தந்தார்.இந்தியா-கொலம்பியா இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவும் பன்முகப்படுத்தவும் இந்தப் பயணம் மேலும் பங்களிக்கும்.

**நியூ டெல்லி**
**அக்டோபர் 03, 2021**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.